008918

<u>சுருக்கம்</u>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணைக்குழு (Equivalance Committee) தீர்மானம் – தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்ககம் வழங்கும் இசை ஆசிரியர் பயிற்சி பட்டயம் பள்ளிக்கல்வித் துறையின் இசை ஆசிரியர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இசை ஆசிரியர் பயிற்சி பட்டயத்திற்கு இணையானது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ.2.1)த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.43

நாள்.15.03.2017
துன்முகி – பங்குனி– 02
திருவள்ளுவராண்டு –2048

<u>படிக்க:–</u>

1. உயர்கல்வித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.14733/K2/2016–2, நாள்.06.10.2016–ன் வழி பெறப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய 54–வது இணைக்குழு கூட்டத் தீர்மானம்.
2. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களின் கடித ந.க.எண்.3535/தொ.நி.க.7/2015, நாள்.09.12.2016.

===========

<u>ஆணை:–</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட உயர்கல்வித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பின் வழி, 08.09.2016 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய 54–வது இணைக்குழுக் கூட்டத்தில் (Equivalence Committee meeting) நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீது ஆணை வெளியிடும் பொருட்டு தீர்மான நகல் அரசுக்கு அனுப்பப்பட்டது. அதில் தீர்மானம் எண்.4–ல் தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்ககம் வழங்கும் இசை ஆசிரியர் பயிற்சிப் பட்டயம் பள்ளிக் கல்வித் துறையின் இசை ஆசிரியர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இசை ஆசிரியர் பயிற்சி பட்டயத்திற்கு இணையானது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்கள் கடிதத்தில், தமிழ்ப் பல்கலைக்கழக தொலை தூர கல்வி இயக்ககத்தால் வழங்கப்படும் இசை ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பானது, பள்ளிககல்வித் துறையின் இசை ஆசிரியர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இசை ஆசிரியர் பயிற்சி பட்டயத்திற்கு இணையானது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இக்கல்வித்தகுதி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் இசை ஆசிரியர் நியமனங்களுக்குப் பொருந்தும் என அரசாணை வெளியிடும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 54–வது இணைக்குழுக் கூட்டத் (Equivalence Committee meeting) தீர்மானம் எண்.4–க்கிணங்கவும், இது குறித்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களின் கருத்துருவின் அடிப்படையிலும் ஆய்வு செய்து, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்ககம் வழங்கும் இசை ஆசிரியர் பயிற்சிப் பட்டயம், பள்ளிக்கல்வித் துறையின் இசை ஆசிரியர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள

இசை ஆசிரியர் பயிற்சி பட்டயத்திற்கு இணையானதாகக் கருதலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. வெங்கடேசன்
அரசு செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்
இயக்குநர் (பொறுப்பு), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,
சென்னை.

**நகல்:**
மாண்புமிகு அமைச்சர் (இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர் அவர்களின் தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை, சென்னை – 9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
இருப்புகோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்